IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE
(FAST TRACK COURT), VELLORE, VELLORE DISTRICT.

DEPOSITION OF WITNESS
SC.NO. 159/2021

Deposition of Witness for P.W.7

| | | |
|---|---|---|
| NAME | - | ராஜா |
| FATHER'S NAME | - | மூர்த்தி |
| VILLAGE | - | |
| TALUK | - | |
| CASTE | - | |
| OCCUPATION | - | |
| RELIGION | - | |
| AGE | - | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 14.02.2024.

**Accsued 1 to 5 and 7 Present. A6 Not Produced At 12.30 P.M.**

நான் ஒடுகத்தூர் அண்ணா நகரில் வசிக்கிறேன். கார் ஒட்டுனராக வேலை செய்கிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியாது. அவர்கள் மீது என்ன வழக்கு என்றும் எனக்கு ஒரு மாதம் முன்னார் தான் தெரிய வந்தது. வழக்கு சம்மந்தமாக போலீசார் என்னிடம் எந்த விசாரணையும் செய்யவில்லை. ஓ ராஜபாளயத்தை சேர்ந்த வழக்கின் இறந்த போன சீனு என்ற சீனுவாசனை எனக்கு தெரியாது. அவர் எப்படி இறந்தார் என்றும் எனக்கு தெரியாது.

சாட்சி பிறழ் சாட்சியாக கருதி அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி அனுமதி அளிக்கப்பட்டதன் பேரில் அரசு தரப்பில் குறுக்கு விசாரணை

நான் போலீசார் விசாரணையின் போது கடந்த 24.12.2014 ஆம் தேதி மாலை சுமார் 6.15 மணிக்கு செல்லாபுரியம்மன் கோவில் பின்புறம் உள்ள ஆற்றங்கரையில்

நானும் எங்கள் ஊரை சேர்ந்த கமலகண்ணன், சரவணன் ஆகியோர்கள் உட்கார்ந்து பேசிக் கொண்டு இருந்த போது ஆஜர் எதிரிகளும் இறந்த போன சீனு என்ற சீனிவாசனும் சற்று தள்ளி உட்கார்ந்து இருந்தார்கள் என்றும் மாலை சுமார் 6.30 மணிக்கு ஆறுமுகம் சீனிவாசனை பார்த்து என் கூட இருந்துகிட்டே என் வியாபாரத்தை கெடுக்கிறியா இனிமேல் நீ சேலத்துகாரனுக்கு செம்மரக்கட்டை ஓடக்க கூடாது என்றும் சொன்னான். அதற்கு சீனிவாசன் ஆறுமுகத்தை பார்த்து நீ சொல்றத எல்லாம் கேட்க முடியாது என்றும் உன்னால முடிஞ்சத பாத்துகோ என்றும் சொன்னான் என்றும் உடனே ஆறுமுகத்தின் அண்ணன் வெங்கடேசன் எழுந்து ங்கோத்தா தேவ்டியா பையா உன்ன அடிச்சி போட்டா கேட்கிறதுக்கு ஆளே இல்ல தொழில் சொல்லி கொடுத்தவன் கிட்டயேவா உன் வேலையை கட்டற என அசிங்கமாக திட்டி காலால் சீனிவாசனின் நெஞ்சு மீது எட்டி உதைத்தார் என்றும் சீனிவாசன் அப்படியே மல்லாக்க சாய்ந்து விட்டான் என்றும் ஆறுமுகம் ஓடிப் போய் சீனிவாசனை பார்த்து விட்டு இவன் செத்துவிட்டான் என்று சொல்லவே உட்கார்ந்திருந்த வெங்கடேசன், கார்த்தி, மணிகண்டன், இளவரசன், வசந்தகுமார், ஆறுமுகம், லோகு ஆகியோர்கள் சீனிவாசனை தூக்கி கொண்டு போய் பக்கத்திலிருந்த வேணுகோபால் நிலத்திலிருந்த கிணத்துல போட்டுவிட்டாகள் என்றும் நாங்கள் 3 பேரும் அங்கிருந்து விந்து விட்டோம் என்றும் கூறியுள்ளேன் என்றாலும் தற்போது எதிரிகளுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.</u>**

P REVATHY Digitally signed by P REVATHY